

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் மனித நேய உதய நாளாக கொண்டாடப்படுவதை முன்னிட்டு வேப்பேரி, பெரியார் திடலில் நடைபெற்ற விழாவில் கழக மூத்த முன்னோடிகள் 500 நபர்களுக்கு புத்தாடைகள் மற்றும் பொற்கிழிகளையும், 500 மாணவ, மாணவியருக்கு கல்வி ஊக்கத்தொகை மற்றும் கல்வி உபகரணங்களையும் கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, அ.வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல், இ.பரந்தாமன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி.லோகேஷ், எழும்பூர் பகுதிக் கழக செயலாளர்கள் வி.சுதாகர். சொ.வேலு.எம்.சி, மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### விருதுநகர் வடக்கு – தெற்கு மாவட்டம் சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு விழா - வினாடி வினா நிகழ்ச்சி!

## மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர்கள் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் – தங்கம் தென்னரசு அறிக்கை!





விருதுநகர், நவ. 29 -

விருதுநகர் மாவட்டக் கழகச் செயலாளர்கள் - அமைச்சர்கள் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

விருதுநகர் வடக்கு தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா வினாடி - வினா நிகழ்ச்சி அருப்புக் கோட்டை நாடார் உறவின்முறை டிரஸ்ட் மஹாலில் 30.11.2023 அன்று காலை 10.00 மணியளவில் கழக துணை பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

அது சமயம் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், மாவட்ட கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக தொண்டர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் பொது மக்கள் பெரும் திரளாகக் கலந்து கொண்டு இவ் வினாடி - வினா நிகழ்ச்சியை சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### அரசியல் ஏமாற்றுப் பேர்வழி கோயபல்ஸ் போல் காட்சியளிக்கிறார் எடப்பாடி!

# ஏழை எளிய மக்களுக்குச் சேவையாற்றும் மருத்துவத் துறை மீது காழ்ப்பு அரசியல் நடத்துவதா?

## டெங்கு குறித்து எடப்பாடி பழனிச்சாமியின் உண்மைக்கு மாறான அறிக்கையை மறுத்து – ஆதாரங்களுடன் அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கம்!



**சென்னை, நவ. 29 -**

**ஒரு பொய்யை உணர்வு பூர்வமாக எடுத்துரைத்து அதை உண்மை என நம்ப வைப்பதில் உலகத்தில்கோயபல்ஸை மிஞ்சிய ஆள் இல்லை என்றும் - அரசியலில் ஏமாற்றுப்பேர்வழிகளின் தந்தை கோயபல்ஸ் போல் காட்சியளிப்பவர் எடப்பாடி பழனிச்சாமி என்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கை விடுத்துள்ளார்.**

**அவரது அறிக்கை வருமாறு-**

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி தவழ்ந்து முதலமைச்சர் பொறுப்புக்கு வந்தவர். அதனால் அவருடைய பேச்சு மற்றும் அறிக்கைஅனைத்தும் அடிப்படையில்லாமல் தவழும் குழந்தை போல் குழந்தைதனமாக உள்ளது என்பது நாடறியும்.ஒன்றல்ல இரண்டல்ல பல முறை அவருக்கு நான் ஆதாரங்களுடன் பதில் அளித்து இருக்கிறேன், இன்னமும்ப திலளிப்பேன்.

எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் இன்று டெங்கு பற்றிய அறிக்கையில் “டெங்குபோன்ற விஷக் காய்ச்சலால் பாதிக்கப் பட்டு அரசு மருத்துவமனைகளுக்கு படையெடுத்து வருவதாகசெய்திகள் வருகின்றன“ என்று குற்றம்சாட்டுவதில் கூட ஆருடம் கூறுவதைப்போல் குழப்பநிலையில்உள்ளார். அடுத்ததாக ஜெயலலிதா ஆட்சியில் நடத்தியதைப் போல முகாம்கள் நடத்த வேண்டும் என்கிறார்எடப்பாடி பழனிசாமி. மருத்துவத்துறை வரலாற்றிலேயே இல்லாத வகையில் 29.10. 2023 தொடங்கி 30.12.2023 வரை மழைக்கால சிறப்பு மருத்துவமுகாம்கள் 10 அறிவிக்கப்பட்டு வாரத்திற்கு 1000 முகாம்கள்என்று இலக்கு அறிவிக்கப்பட்டதில், இலக்கை மிஞ்சிய சாதனையாக இதுவரை நடைபெற்ற 5 வார மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்களில் 5000 முகாம் நடைபெற்று இருக்க வேண்டும். ஆனால் 10,576 முகாம்கள் நடைபெற்று உள்ளது.

அதில் 5,21,853 பேர் பங்கேற்று பயன்பெற்றுள்ளனர்.இது தெரியாமல் புரியாமல் யாரோ எழுதிக் கொடுத்ததை வருகிற நாடாளுமன்ற தேர்தலை மனதில்கொண்டு மருத்துவத்துறையில் அரசியல் செய்ய பார்க்கிறார். இதில் என்ன வேடிக்கை என்றால் ஜெயலலிதா ஆட்சியில் 2012ஆம் ஆண்டு உச்சக் கட்ட டெங்கு பாதிப்பு 13,204 பேர் பாதிக்கப்பட்டு 66 பேர் உயிரிழந்துள்ளனர். அதனைத்தொடர்ந்து அதிகமாக டெங்கு பாதிப்பு 2017 ஆம் ஆண்டுதவழ்ந்து வந்து ஆட்சியைப் பிடித்த எடப்பாடி ஆட்சிக்காலத்தில் பாதிப்புகள் 23,294, இறப்பு 65.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மருத்துவத்துறை ஜனவரி 2023 முதல் இதுவரை 3,57,612 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு ஜனவரி முதல் இதுவரை 7,133 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் மருத்துவமனை சிகிச்சையில் உள்ளோர் எண்ணிக்கை 537 பேர், 10 பேர் இறந்துள்ளனர் என்று நாள்தோறும் என்னுடைய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்து வருகிறேன்.

திராவிட மாடல் அரசின் நாயகர்; முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி உள்ளதை உள்ளபடி அரசியல் செய்யவோ அரசை நடத்தவோ தெரிந்தவர்கள் நாங்கள் குனியவோ, குழையவோ, தவழவோ தெரியாதவர்கள் பழகாதவர்கள் நாங்கள்.

மருத்துவத்துறை, உள்ளாட்சித்துறை இணைந்து தேங்கி உள்ள தண்ணீரை அகற்றி டெங்கு பரவலை தடுக்க வேண்டும் என்கிறார் எடப்பாடி. 2021 திமுக ஆட்சி அமைந்த பிறகு பெருநகரசென்னை மாநகராட்சியில் மட்டும் 862.56 கிமீ ரூ.2,899.09 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளனமற்றும் 369.60 கி.மீ நீளத்திற்கு ரூ.1894.59 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் பணிகள்நடைபெற்று வருகிறது. இந்நிலையில் தொடர் மழை பெய்து ஏரி, குளம் நிரம்புகிறதே தவிர சாலையில்ஒரு சொட்டு நீர் கூட தேங்குவதில்லை.

இதை அறியாமல் எடப்பாடி அவர்கள் ஒரு பொய்யை உணர்வுபூர்வமாக எடுத்துரைத்து அதை உண்மை என நம்பவைப்பதில் உலகத்தில் கோயபல்ஸ் மிஞ்சிய ஆள் இல்லை என்பார்கள். அதைப்போல ஏமாற்றுப்பேர் வழிகளின் தந்தை கோயபல்ஸ் போல் காட்சித்தருகிறார். அவர் நிலையைமாற்றி கொள்ள வேண்டும். ஓட்டு அரசியலுக்காக பல இலட்சம் ஏழை, எளிய மக்கள் பயன் படுத்தும்மருத்துவமனைகள் மீதும், சேவைபுரியும் மருத்துவத்துறை மீதும் காழ்ப்புணர்ச்சி அரசியலை இனிவரும் காலங்களில் தவிர்க்க வேண்டும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கையில் தெரிவித்தார்கள்.



கழக இளைஞரணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி தி.மு.க. சார்பில் அணி அமைப்பாளர் தேவசேனன் மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். உடன் அணித்தலைவர் அன்பு செல்வம், துணைத் தலைவர் திருநாவுக்கரசு, துணை அமைப்பாளர்கள் தம்பிதுரை, முகமது இத்ரீஸ், ஒலி ராஜா, சிவகுருநாதன், பாலசுப்பிரமணியன் மற்றும் திரளான வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

# திருவொற்றியூரில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி!

சென்னை, நவ. 29 -

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும் மாநில இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் வார்டு 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 14அ ஆகிய வட்டங்களில் நடைபெற்ற வாக்காளர் சரி பார்த்தல் சிறப்பு முகாமில் அனைத்து வாக்குச் சாவடிகளிலும் பாக முகவர்கள், பாகநிலை முகவர்கள் BLA 2 & BLC கலந்து கொண்டு புதிய வாக்காளர் சேர்த்தல், முகவரி மாற்றம், பெயர் திருத்தம் செய்தல் போன்ற பணிகளை திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு ஆய்வு மேற்கொண்டார்.

இதில் வீ.கவி கணேசன், மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் டி.ஏ.ராஜ், பி.சாந்தி, பகுதி துணை செயலாளர்கள் எம்.வி.குமார், ஆர்.எஸ்.சம்பத், கே.பிரபாவதி, ஆர்.குமரேசன், வட்ட செயலாளர்கள் த.கார்த்திகேயன், எம்.எல்.சரவணன், டி.சி.வி.மணிகண்டன், எஸ்.தமிழ்செல்வன், குறுத்து சி.முனுசாமி, க.வீ. சதிஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், ஏகா. கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.பாஸ்கர், ஒய்.ரஜினிநந்தி, ஆர்.ரஜினி பாபு, வி.பழனிவேல், டி.டி. எம்.பாபு, பி.எஸ்.சைலஸ், ம.ஜெயராமன், ம.எத்திராஜ், கே.கார்த்திகேயன் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் கலந்து கொண்டு வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணியில் ஈடுபட்டனர்.

# சங்கத் தமிழ் ஈன்ற புறநானூறு!

### (முத்தைத் திரு பத்தித்திருநகை. பாடல் சந்தம்)



காலை முதல் மாலை இரவிலும்
நட்ட நடு இரவுப் பொழுதிலும்
வெற்றிச் சுடர் வேர்வை வடிக்கிற
அவர் யாரு

பள்ளிகளில் துள்ளி வருகிற
பிள்ளைகளின் காலை உணவினை
அள்ளித்தரும் தாயின் குணம்
அவர் யாரு
அன்பின் மதி
பண்பின்மதி அவர் பெண்கள் பெறும் மாத
நிதியினைத் தந்தை என வந்துத் தருகிற
அவர் யாரு
இல்லங்களில் கல்வி தருகிற வீடுகளில் தேடி
வருகிற மாத்திரை மருந்து தருகிற
அவர் யாரு
கற்றலிலே நிற்றல்ஆகுற
பிள்ளைகளும் கல்வி பெறுகிற
திட்டங்களில் வெற்றி பெறுகிற
அவர் யாரு

இன்னுயிரைக் காப்போம் என்றவன்
மண்ணுயிரைப் போற்றும் மன்னவன்
மக்கள் கடல் என்றும் உயிர் என்றவன்
அவர் யாரு

தாயின் மொழி கோயில் முழங்கிட
தங்கத்தமிழ் எங்கும் மலர்ந்திட

எல்லோருமே அர்ச்சகர் என்றவன்
அவர் யாரு

வங்கிகளில் தங்க நகைகளில்
பெற்ற கடன் நீக்கச் செய்தவன்
தள்ளுபடி செய்த தலைவனே
அவர் யாரு

பெருமை எனப் பெண்ணைச் சொன்னவன்
கருணையிலே நிதியைத் தந்தவன்
உரிமைத் தொகை என்றே தந்தவன்
அவர் யாரு

மேலோர் என யாரும் இல்லையே
கீழோர் என யாரும் இல்லையே
எல்லாம் இனி ஒன்றே என்றவன்
அவர் யாரு
மானம் தன் மானஆட்சியில்
தெய்வத்தமிழ் ஆளும் காட்சியில்
வானம் என காக்கும் மன்னவன்
அவர் யாரு

வேர்வை யிலை வெற்றி பெற்றவன்
வெல்லும் தமிழ் வீரத் தமிழ் மகன்
வெண்ணிலவு ஞானச்சூரியன் அவர் யாரு
கலப்பை நிகர் கால்கள் கொண்டவன்
உழைப்பே தன் உயிராய்க் கொண்டவன்
கோட்டையிலே குறிஞ்சி மலர் அவன்
அவர் யாரு
ஊசிமணி பாசி விற்பவன்
உள்ளங்களில் தாயாய் நிற்பவன்
பேசும் மொழித் தேனைத் தருபவன்
அவர் யாரு
தூய்மையெனத் தொண்டு செய்பவன்
வாய்மை என வாழும் தமிழ் மகன்
நேர்மை விழி நீதி நெறியவன்
அவர் யாரு
பாதங்களில் நாட்டை அளந்தவன்
பயணங்களில் நதியாய்ச் செல்பவன்
காற்று என வாழ வைப்பவன்
அவர் யாரு
பள்ளி நம் பெருமை என்றவன்
பாடம் எழுத்தறிவு தந்தவன்
எண்ணம் தரும் எழுத்தைத் தருகிற
அவர் யாரு
கிராம சபை கூட்டம் படைத்தவன்
சேம நலத் திட்டம் வகுத்தவன்
பூமி எலாம் போற்றும் தமிழ் மகன்
அவர் யாரு
எதிரிகளை உதிரி ஆக்கிடும்
உதயநிதி உழைப்பை வாழ்த்திடும்
புதுமைகளை நாட்டில் புகுத்திடும்
அவர் யாரு
சங்கத் தமிழ்ஈன்ற புறநானூறு



முனைவர் சொற்கோ
**இரா.கருணாநிதி**
(பேராசிரியர் – பாடலாசிரியர்)

### 2023 – 24 ஆம் ஆண்டுக்கான

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் - பொதுக் கணக்குக் குழுக் கூட்டம்!

## கு.செல்வப்பெருந்தகை தலைமையில் நடைபெற்றது!

## மேயர் ஆர். பிரியா – துணை மேயர் மு.மகேஷ் குமார் பங்கேற்பு!

சென்னை, நவ. 29 -

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2023-24ஆம் ஆண்டு பொதுக் கணக்குக் குழுக் கூட்டம் பொதுக் கணக்குக் குழுத் தலைவர் கு.செல்வபெருந்தகை தலைமையில் நேற்று முன்தினம் (27.11.2023) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் தலைமையிலான குழுவினர் பெருநகர சென்னை மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, தீயணைப்புத் துறைகளின் தணிக்கை பத்திகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

முன்னதாக, பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட சேத்துப்பட்டில் இயங்கி வரும் 100 டன் திறன் கொண்ட உயிரி எரிவாயு தயாரிக்கும் நிலையத்தினை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவினர் நேற்று முன்தினம் (27.11.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அதன் செயல்பாடுகள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தனர்.

பின்னர், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பிரகாசம் சாலை மற்றும் எஸ்பிளனேடு சாலையில் மழைநீர்த்தேக்கம் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.5.97 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்ச ரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ரிப்பன் கட்டடத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து கண்காணிக்கப்படுவதைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். மேலும் ரிப்பன் கட்டட வளாகத்தில் கட்டப்பட்டு வரும் பசுமைக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகளையும் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவினர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இக்கூட்டத்தில், மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், குழுவின் உறுப்பினர்கள்/சட்டமன்ற உறுப்பினர்கள் அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி, ஈ.ஆர். ஈஸ்வரன், க.கார்த்திகேயன், ஆ.கிருஷ்ணசாமி, துரை சந்திரசேகரன், டாக்டர் சி. சரஸ்வதி, எஸ். சேகர், எஸ்.எஸ். பாலாஜி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன், இணைச் செயலாளர் திருமதி பி.தேன்மொழி, சார்புச் செயலாளர் ஜெ.பாலசீனிவாசன், நகராட்சி நிருவாகத்துறை இயக்குநர் சு.சிவராசு, கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், வட்டார துணை ஆணையாளர்கள் எம்.பி.அமித், (தெற்கு), கே.ஜெ.பிரவீன் குமார், (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு), நிலைக்குழுத் தலைவர்கள் த.விசுவநாதன் (கல்வி), டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), மண்டலக்குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் தூத்துக்குடி தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் கேக் வெட்டி பிறந்த 15 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கினார் தூத்துக்குடி தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம் அதனைத் தொடர்ந்து காயல்பட்டினத்தில் நகர இளைஞர் அணி சார்பாக தூய்மை பணியாளர்கள் 200 பேருக்கு அரிசி காய்கறி பருப்பு வகைகள் வழங்கப்பட்டது. நெல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் குமாரப் பாண்டியன் தலைமையில் 500 பேருக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.ஸ்ரீவைகுண்டம் நிகழ்ச்சியில் தூத்துக்குடி ஊராட்சி மன்ற தலைவர் அ.பிரம்மசக்தி கொடியேற்றி 200 துப்புரவு பணியாளர்களுக்கு வேட்டி சேலை வழங்கப்பட்டது. உடன் துணை அமைப்பாளர்கள் குமார் பாண்டியன், ஸ்டாலின், திருச்செந்தூர் ஒன்றியச் செயலாளர் ஏ.பி.ரமேஸ், நகரச் செயலாளர் வாள் சுடலை, இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாலமுருகன் சுகு என்ற ரங்கநாதன், அஜிவாஜி, இளைஞர் அணி நிர்வாகி தமிம் அன்சாரி, ஆறுமுகநேரி விக்னேஷ், குரும்பூர் வீகன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.